**இந்திய உயர் ஸ்தானிகராலயம்**

**கொழும்பு**

**************

**<u>ஊடக அறிக்கை</u>**

**இந்திய வீட்டுத்திட்டத்தின் கீழ் காலி ஹோமதள தோட்டத்தில் 50 வீடுகளுக்கான அடிக்கல் நாட்டல்**

இலங்கைக்கான பதில் இந்திய உயர் ஸ்தானிகர் திரு . வினோத் கே ஜேக்கப் , சமூக வலுவூட்டல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் கௌரவ ஆறுமுகம் தொண்டமான் மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் மற்றும் ஏற்றுமதி விவசாய அமைச்சர் கௌரவ ரமேஷ் பத்திரண ஆகியோர் இணைந்து காலி ஹோமதள தோட்டப் பிரிவில் 2020 மார்ச் 02 ஆம் திகதி நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் 50 வீடுகளுக்கான இந்திய வீட்டுத்திட்டம் ஒன்றுக்கான அடிக்கல்லினை நாட்டி வைத்தனர்.

தோட்டத்தொழிலாளர்களுக்காக பெருந்தோட்டப் பகுதிகளில் இந்தியாவால் அமைக்கப்படும் 14000 வீட்டுத்தொகுதிகளின் ஓர் அங்கமாக இந்த வீடுகள் நிர்மாணிக்கப்படுகின்றன . 60000 வீடுகளை நிர்மாணிக்கும் நோக்கில் இந்திய அரசாங்கத்தின் நிதிஉதவியின்கீழ் வெளிநாடொன்றில் மேற்கொள்ளப்படும் பாரிய திட்டமாக இந்திய வீட்டுத்திட்டம் அமைகிறது . இதில் வடக்கு கிழக்கில் 46000 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டு கையளிக்கப்பட்டுள்ளன . பெருந்தோட்டப் பகுதிகளில் பெருந்தோட்ட சமூகத்துக்கான 14000 வீடுகளில் இதுவரை 2500 வீடுகள் இதுவரை நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

இதற்கு மேலதிகமாக இலங்கையில் நாடளாவிய ரீதியில் வீடமைப்பு அமைச்சு தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையினால் கிராம அபிவிருத்தி திட்டத்தின்கீழ் முன்னெடுக்கும் 2400 வீடுகள் நிர்மாணத்திட்டத்திலும் இந்தியா பங்குதாரராக காணப்படுகின்றது.

மக்களை இலக்கு வைத்து இலங்கை அரசாங்கத்துடன் இணைந்து இந்தியாவால் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி ஒத்துழைப்பு திட்டங்களின் அடிப்படையில் இந்த திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இந்தியா இதுவரை 3.5 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அபிவிருத்தி உதவி திட்டங்களை முன்னெடுத்துள்ளதுடன் இவற்றில் 560 மில்லியன் அமெரிக்க டொலர் முற்றுமுழுதான நன்கொடைத் திட்டங்களாக வழங்கப்பட்டுள்ளன.

*****

கொழும்பு
02 மார்ச் 2020